நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை எனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துரு உரிய அசல் ஆவணங்களுடன் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில் அரசால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின்னர், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்கீழ், கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டுள்ள செல்வி.ஜெ.ஜெபிஷா, என்பவர் பணிநியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தனியரின் பணியினை இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 23.08.2021 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவைத் தொகை பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் 04.01.2023-ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண், 18823/ட்டி1/2022-1, மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சாரா எண் 3876274/G2/2022, நாள் 10.01.2023-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி மாவட்டம்.
செல்வி.ஜெ.ஜெபிஷா, இளநிலை உதவியாளர், ஊரக வளர்ச்சிப் பிரிவு,
கன்னியாகுமரி மாவட்டம்.
(வழி:மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி மாவட்டம்.)
மாநிலக் கணக்காயர், சென்னை -18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், கன்னியாகுமரி மாவட்டம்.

**நகல்:**

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

மே.கு.ந.க.எண். அ1/5177/2021, நாள்: 13.04.2023
நகல் சார்பு செய்யப்படுகிறது.

13/4/2023
ஆணையாளர்
ஊராட்சி ஒன்றியம்
திருவட்டார்

பெறுநர்:
ஏ. ஜெபிஷா,
இளநிலை உதவியாளர்,
திருவட்டார் ஊராட்சி ஒன்றியம்.

13/4/2023

10651

சுருக்கம்

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படை பணிநியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை - கன்னியாகுமரி மாவட்டம் - பணியில் இருக்கும் போது காலமான ஈப்பு ஓட்டுநர், திரு.அ.ஜெபக்குயின் என்பவரின் மகள் செல்வி.ஜெ.ஜெபிஷா, இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை

அரசாணை (3ப) எண். 07 / நாள்: 01.02.2023.
சுபகிருது, தை 18
திருவள்ளுவர் ஆண்டு 2054.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (கியூ.1) துறை, நாள்:23.01.2020.
2. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளரின் செயல்முறைகள் ந.க.எண்.ஈ6/13657/2021, நாள் 18.08.2021.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.1766/2022/டி3, நாள் 24.08.2022.

-----

ஆணை:

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில் கன்னியாகுமாரி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில், தோவாளை ஊராட்சி ஒன்றியத்தில் ஈப்பு ஓட்டுநராகப் பணிபுரிந்து 09.12.2020 அன்று பணியிடைக்காலமான திரு.அ.ஜெபக்குயின் என்பவரின் வாரிசுதாரரும் மகளுமான செல்வி.ஜெ.ஜெபிஷா, என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 23.08.2021 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. மேலும், மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண் பருவம் முடித்த பணியாளர் என்றும் அவரது குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும், அவரது மகள் செல்வி.ஜெ.ஜெபிஷா, கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 22.04.2021 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 27.03.2000 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 21 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி